# பாதாள கேபள் வரைபடம்: டி.பி.கே.எல். பயன்பாட்டு நிறுவனங்கள் இடையே ஒத்துழைப்பு தேவை

கோலாலம்பூர், ஆக. 25- மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும் போது விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்வதை தவிர்க்க பாதாள பயன்பாட்டு வசதிகளை வரைவதில் மாநகர மன்றம் (டி.பி.கே.எல்.) ஒத்துழைக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

ஏராளமான பகுதிகளில் குழாய்களும் மின்சார வடங்களும் அமைக்கப்பட்டிருப்பதால், பாதாள நிலவரத்தை தெரிந்து கொள்ள பயன்பாட்டு வசதிகளின் திட்டமிடல் மிக முக்கியம் என்று தொடர்பு துறை அமைச்சர் ஃபாமி ஃபட்ஸில் கூறினார்.

திட்டங்களின் மேம்பாட்டின் போது தூர்வாரும் நிறுவனங்களால் வெளியிடப்படும் வரைபடத்தில் மிகப்பெரிய டி.என்.பி. வடங்கள் குறிப்பிடப்படாமல் இருப்பது



பற்றி ஏராளமான புகார்களை பெற்றிருக்கிறேன் என்றார் அவர்.

எனவே, மேற்பரப்பை மட்டுமின்றி நமது பயன்பாட்டு வசதிகளையும் திட்டமிட்டு அமைத்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்த கோலாலம்பூர் மேயருடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியம் என்று அவர் நேற்று கூட்டரசுப் பிரதேச மெகா மெர்டேகா கோத்தோங் - ரோயோங் நிகழ்ச்சிக்கு பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனிடையே நேற்று முன்தினம் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்ததை போன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் தவிர்க்க பயன்பாட்டு வசதிகளின் திட்டமிடல் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தாம் ஒரு சந்திப்பை நடத்தவிருப்பதாக கோலாலம்பூர் மேயர் மைமுனா ஷாரிஃப் கூறினார்.